DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-160/2023
Prosecution witness – PW.4

| | | |
|---|---|---|
| Name | : பாண்டீஸ்வரி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

14.12.2023

<u>முதல் விசாரணை</u>

1. இம்மனுவின் மனுதாரர் எனது கணவர். இதர சாட்சிகள் அனைவரும் எனது உறவினர்கள்.
2. 14.05.2015 ம் தேதி காலை 6 மணிக்கு கமுதி காவல் நிலையத்தை சேர்ந்த 5 போலீசார் என் வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த என் கணவர் ஆறுமுகத்தின் வண்டியை உடைத்தார்கள். என் மாமியார் என்னவென்று கேட்டார். அதற்கு போலீசார் என் மாமியாரிடம் உன் மகனை போலீஸ் ஸ்டேசனுக்கு வர சொல்லு என்று சொல்லிவிட்டு வண்டியை எடுத்து கொண்டு சென்று விட்டார்கள். என் மாமியார் என் மச்சான் மாரிமுத்துவிற்கு போன் செய்து தகவல் சொன்னார்.
3. அதன் பிறகு நான் பிறந்த ஊரான கீழத்தூவல் கிராமத்தில் நான் இருந்த போது எனது கணவரின் வாகனமான TN 65 C 1400 மகேந்திரா மேக்சிகேப் என்ற வாகனத்தை போலி சீருடையில் வந்த நபர்கள் பூட்டை உடைத்து எடுத்துச்சென்ற போது நானும் என் தாயாரும் தடுத்ததால் எங்களை போலீசார் ஆபாசமாக பேசி பலவந்தமாக எடுத்துச் சென்றுவிட்டார்கள்.
4. நான் உடனே எனது அண்ணன் வீட்டிற்கு வந்த பொழுது நடந்த விபரத்தை கூறினேன்.
5. மேற்படி சம்பவம் குறித்து என் கணவர் நடவடிக்கை எடுக்க புகார் அளித்துள்ளார். அந்த புகார் படி உத்தரவிமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.